பக்கங்கள் – 12+II
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 211

வியாழக்கிழமை
26 ஜூன் 2025

ஆனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

மன்னார் நகரிலிருந்த

## தந்தை செல்வா சிலை உடைப்பு

ஒருவர் கைது

மன்னார், ஜூன் 26
மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த தந்தை 10

## கைலாசப்பிள்ளையார் கோவிலில் நீதிகோரி நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கும் விதமாக, யாழ்ப்பாணம் கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. 10

செம்மணிப் புதைகுழிப் பகுதிக்குள்

## ஊடகவியலாளர்கள் வரக்கூடாது

பொலிஸார் கெடுபிடி

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழிக்கு, மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் சென்றபோது, செய்தி சேகரிப்புப் பணிகளில் ஈடுபடவும், ஒளிப்படங்களைப் பதிவு 11



# அணையா விளக்குப் போர் நேற்றுப் பேரெழுச்சி

## கலந்துகொண்டார் வோல்கர் ட்ரக்

**யாழ்ப்பாணம், ஜூன் 26**

**யாழ்ப்பாணம் செம்மணியில், முன்னெடுக்கப்பட்டுவந்த 'அணையா விளக்குப் போராட்டம்', நேற்று மூன்றாம் நாளாகப் பேரெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் போராட்டக்களத்துக்குச் சென்று செம்மணியில் கொல்லப்பட்டோரின் நினைவாக வைக்கப்பட்டிருந்த தூபிக்கு அஞ்சலி செலுத்தினார்.** 11



## செம்மணிப் புதைகுழியை பார்வையிட்டார் வோல்கர்

யாழ்ப்பாணம், ஜூன் 26
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், அரியாலை - செம்மணிப் புதைகுழியை நேற்றுப் பார்வையிட்டதுடன், துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட் 11

அணையா விளக்குப் போராட்டத்தில்

## அரசியல்வாதிகள் சிலர் கொந்தளிப்பாளர்களால் வெளியேற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணம் செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட 'அணையாவிளக்குப் போராட்டத்தில்' அரசியல்வாதிகள் சிலர், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கொந்தளிப்பாளர்களால் வெளியேற்றப்பட்டனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், கடற்றொழில் அமைச் 11



## போராட்டத்தை ஆதரித்தே செம்மணிக்குச் சென்றேன்!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு
கொந்தளிப்பாளர்களுக்குக் கண்டனம்

விரிவு பக்கம்:- 11

## அணையா விளக்குப் போராட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு கதவடைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில், மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் நேற்றுச் சென்ற வேளையில், ஊடகவியலாளர்கள் தங்களின் பணிகளை ஆற்றமுடியாதவாறு கறுப்புடை தரித்திருந்த சிலரால் இடையூறுகள் வழங்கப்பட்டன. கடந்த மூன்று தினங்களாக செய்திகளை வெளி 10

'எல்லாத்திலையும் கொழுவல் எடுக்கிறது எங்கட ரத்தத்தில ஊறிப்போட்டுது பாருங்கோ'

## செம்மணிப் புதைகுழி; அகழ்வுப் பணி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இன்று மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன. செம்மணிப் புதைகுழியின் அடுத்த 10

## இராணுவப் பிரசன்னம்; கேட்டறிந்தார் ஆணையாளர்

வடமாகாண ஆளுநர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 26
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், வடமாகாணத்தில் நிலவும் இராணுவப் 11


விரிவுகள் பக்கம்:- 10



நானாட்டான் பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி!



செட்டிகுளம் பிரதேசசபையில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி



முசலி பிரதேசசபையில் வென்றது திசைகாட்டி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 4113 | ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 20 55 63 77 | விசேட எழுத்து J

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 1180 | வெற்றி இலக்கினம் மீனம் | வெற்றி இலக்கங்கள் 05 26 30 53

**NLB ஜய** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 0139 | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 4 0 0 0

**மெகா பவர்** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 2219 | ஆங்கில எழுத்து Q | சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கங்கள் 23 49 59 61

**மஹஜன சம்பத** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 5871 | ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 3 2 4 4 8 0

**தன நிதானய** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 1901 | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 14 25 69 77 | விசேட எழுத்து U

**அத சம்பத** — திகதி 25.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 0446 | ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 4 4 8 0

# கடற்றொழில் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வுகளை எட்டுவோம்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 26**

**யாழ்.மாவட்டத்தில் கடற்றொழில் சார்ந்து முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை நிச்சயமாக எட்டுவோம் என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்னகமகே தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பிரதேச ரீதியான இணக்கப்பாடு எமக்குத்தேவை. பிரதேசப் பிரச்சினையைத் தீர்க்க பிரதேச செயலாளர் உள்ளூராட்சி நிறுவனங்களை ஒழுங்கமைக்கவேண்டியிருப்பதால் நாட்டில் ஒன்பதாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமாக இதனை நாம் ஏற்பாடுசெய்துள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீனவர் பிரச்சினையை விரைவாகத் தீர்க்கச் சொல்லியுள்ளார். உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப விவசாயம், பெருந்தோட்டம் உட்பட கடற்றொழிலையும் வளர்க்க வேண்டும். யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 25 சதவீதத்தினர் கடற்றொழில் மூலம் சீவிக்கின்றார்கள்.

எனவே கடற்றொழில் சார்ந்து முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நாம் நிச்சயமாகத் தருவோம் - என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0579 | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 2 3 8 1 1 1

**Super Ball** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | சீட்டிழுப்பு வாரம் 2845 | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 06 19 37 44

**சனிதா** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கம் 04 06 07 32 | வெற்றி வாரம் 5006

**லக்ன ராசி** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | மேஷம் | வெற்றி இலக்கம் 06 19 43 60 | சீட்டிழுப்பு வாரம் 4557

**KAPRUKA** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | ஆங்கில எழுத்து K | சுப்பர் இலக்கம் 36 | வெற்றி இலக்கம் 19 23 27 28 | வெற்றி வாரம் 2021

**அத கோடிபதி** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 03 40 53 70 | வெற்றி வாரம் 2671

**JAYODA** — திகதி 25.06.2025 | தினம் புதன்கிழமை | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 22 26 51 66 | வெற்றி வாரம் 2138

# 30 ஆண்டுகளின் பின்னர்

## மாவைக்கந்தனுக்கு மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இதுவரை காலமும் காம்யோற்சவம் இடம்பெற்றுவந்த நிலையில் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 12.06 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

25 தினங்கள் இடம்பெறவுள்ள பெருவிழாவை முன்னிட்டு மஹோற்சவப் பூர்வாங்க நிகழ்வாக நேற்றுப் புதன்கிழமை கீரிமலை காசி விஸ்வநாதர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று, மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்குச் சகல உபசாரங்களுடன், அடியவர்கள் புடைசூழக் கொடிச்சீலை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடைந்து ஆலயப் பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமான மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்களிடம்கொடிச்சீலை கையளிக்கப்பட்டது. (ச-25,66)

# 359 கடலட்டைப் பண்ணைக்கு யாழ். மாவட்டத்தில் அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 359 கடலட்டைப் பண்ணைக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக நெக்டா நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்கனவே 499 கடலட்டைப் பண்ணைகள் உள்ளன. இதேவேளை 359 கடலட்டைப் பண்ணைகள் புதுப்பண்ணைகளாக விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளன. மேலும் புதிதாக 5 விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

### மத்தியகிழக்கில் போர்ச்சூழல்

# இலங்கைக்கு ஏற்படும் தாக்கத்தை ஆராயக் குழு

கொழும்பு, ஜூன் 26

மத்தியகிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலையால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும், பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் அமைச்சரவை உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதற்கமைய மத்தியகிழக்கு போர்ச்சூழல் தொடர்பில் ஆராய்ந்து, தாக்கங்கள் ஏற்படக் கூடிய துறைகள், தாக்கத்தின் அளவு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றி மீளாய்வுசெய்து, அமைச்சரவைக்கு சந்தர்ப்பத்துக்கேற்ப பொருத்தமான விதந்துரைகளை வழங்குவதற்காகவே மேற்படி அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான விஜித ஹேரத், சமந்த வித்யாரத்ன, வசந்த சமரசிங்க மற்றும் குமார ஜயகொடி ஆகியோர் உபகுழுவில் இடம்பெற்றுள்ளனர். (ச-44)



# தலைக்கவசத்தால் ஒருவர் கொலை

கொழும்பு, ஜூன் 26

களுத்துறையில் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு தந்தை ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைசெய்யப்பட்டவர் 50 வயதுடையர். அவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். கொலை செய்யப்பட்டவருக்கும் அவரது உறவினர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கொலையில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# அரச உயர் பதவிகளுக்கு நால்வர் நியமனம்

## ஒருவர் தமிழர்

கொழும்பு, ஜூன் 26

உயர்பதவிகளுக்கான நாடாளுமன்றக்குழு நான்கு அரச நிறுவனங்களின் தலைவர்களை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கடந்த 20ஆம் திகதியன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தின்போது இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதன்படி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் தலைவராக எஸ். நேசராஜன் நியமிக்கப்படவுள்ளார்.

ஊழியர் நம்பிக்கை நிதி சபையின் தலைவராக சோமசிறி ஏகநாயக்க, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பி. ஏ. பி. கே. ஆர். பமுனு ஆராச்சி, லொத்தர் சபையின் தலைவராக ஆர். ஏச். ஸ்வர்ணதிலக ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீர்மானங்களை நிறைவேற்றமுடியாத

# உப்புச்சப்பற்ற கூட்டத்துக்கு அழைப்பு விடுக்காதீர்கள்!

*யாழ்.மாவட்டப் பிரதேசசபைகளின் தவிசாளர்கள் காட்டம்*


ப.மயூரன்


க.ஜெசீதன்


பிரகாஷ்

**யாழ்ப்பாணம், ஜூன் 26**

**தீர்மானங்களை நிறைவேற்றமுடியாத மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்காதீர்கள். தாங்கள் கூறவந்த விடயங்களைக் கூறினார்களேதவிர மக்களின் குறைகளைக் கேட்டறிவது நடைபெறவில்லை என்று யாழ்.மாவட்டத்தின் தவிசாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

யாழ்.மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதன்போது நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவிக்கையில்,

யாழ்.குடாக் கடல் எத்தனையாம் ஆண்டு ஆய்வுசெய்யப்பட்டது என்ற கேள்வியை நான் தொடுத்திருந்தேன். அதற்கான பதிலைத் துறை சார்ந்த அதிகாரிகளோ பொறுப்புவாய்ந்த அமைச்சரோ வழங்கவில்லை. 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆய்வுகள் நடத்தப்படவில்லை. அளவுத்திட்டங்கள் எவையும் வரைபடங்களாக இல்லை. கடந்தகால அரசாங்கங்களைப் போன்றே இந்த அரசாலும் கடற்றொழில் வஞ்சிக்கப்படுகின்றது - என்றார்.

தென்மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் க.ஜெசீதன் தெரிவிக்கையில்,

மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடத்தவேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட கூட்டமாக இது அமைகிறது. பெரும்பான்மையான மீனவர் சங்கங்களின் கருத்துகளைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. பொம்மைக்கூட்டங்களை இனி நடத்தாதீர்கள்- என்றார்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் பிரகாஷ் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த சிங்களப் பிரதி அமைச்சர் ஒருவர் நீண்ட நேரம் சிங்களத்தில் நிகழ்ச்சி நேரலை முன்னெடுத்திருந்தார். மொழிபெயர்ப்பில் செலவிடாது மக்களுடைய பிரச்சினைகளை அறிவதற்கு நேரங்களை ஒதுக்கவேண்டும். சிறந்த திட்டமிடலுடன் கூட்டங்களை நடத்தி நேரவிரயத்தைத் தடுக்க வேண்டும்- என்றார். (ச-125)

# தண்டப்பணமாக போலி நாணயத்தாள்

*கொடுத்த பெண் கைது*

கொழும்பு, ஜூன் 26

போலி நாணயத்தாளை நீதிமன்றத்தில் தண்டப்பணமாகச் செலுத்த முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

28 வயது யுவதி ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதன்போது குறித்த பெண் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை தண்டப்பணமாகச் செலுத்தியுள்ளார். யுவதியால் வழங்கப்பட்ட நாணயத்தாள் போலியானது என்பதைக் காசாளர் கண்டுபிடித்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-25,6)

# படகு கட்டுமானத் தளம் காரைநகரில் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 26

காரைநகர் பிரதேசத்தில் படகுகளை உற்பத்திசெய்யும் நிறுவனமொன்று தனது செயற்பாடுகளை எதிர்வரும் ஜூலை முதல் ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குறித்த நிறுவனம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

படகுகளை உற்பத்தி செய்தல், படகுகளைப் பழுதுபார்த்தல், படகுகளை விநியோகம் செய்தல் என்பன இந்த நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# கடற்றொழிலை மேம்படுத்த கிளிநொச்சியில் கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் ரத்ன கமகேவும் பங்கேற்றார். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும்,பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

முறையான அறிவியல் முறைகள் மற்றும் நடைமுறை உத்திகள்மூலம் மீன்பிடித்தொழிலை நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் ஊடாக அதிக மீன்களை உற்பத்திசெய்து நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்குதல் மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச-25)

## 'அரிசியாக்கிறதிலயும் அரசியல்'

**ஊர்கூடித் தேரிழுக்க நினைச்சால் அதைக் குழப்பிறதுக்கெண்டே நாலைஞ்சு பேர் இருக்கத்தான் செய்வினம். தேரை இழுக்கிறதைவிட அதைக் குழப்ப நினைக்கிறவையைச் சமாளிக்கிறதுதான் பெருங்கஷ்டம். மூண்டு நாளா செம்மணி வெளியில 'அணையாவிளக்கு' எண்ட ஒரு போராட்டம் எழுச்சியா நடந்தது. வழமையான போராட்டங்களைவிடவும் கொஞ்சம் வேறவிதமா யோசிச்சு, எங்களால இப்பிடியும் நீதிகேக்க முடியும் எண்டமாதிரி அந்தப் போராட்டம் இருந்தது. கனகாலத்துக்குப் பிறகு சனங்கள் தன்னெழுச்சியோட தாங்களாவே போன போராட்டம் இந்த அணையாவிளக்குத்தான். ஆனால் அதையும் கெடுக்கவெண்டு சிலர் இருக்கத்தான் செய்யினம். அந்தப் போராட்டத்துக்குப் போய் தங்கட ஆதரவைத் தெரிவிச்ச சில அரசியல்வாதியளோட தேவையில்லாமல் கொழுவல் எடுத்து, அவையை அங்க இருந்து சிலர் கலைச்சிருக்கினம்.**

**வீட்டுக்கட்சியின்ர பதில் தலைவர் 'சீ.வி.கே' யோட இந்தக் கலைப்பு விளையாட்டுத் தொடங்கினது. இத்தனைக்கும் இந்தப் போராட்டம் அறிவிச்ச கையோட, தங்கட பிரதேசசபை உறுப்பினர்மார் எல்லாரும் கட்டாயம் இந்தப் போராட்டத்துக்குப் போகோணும் எண்டு முதல் முதலா அறிக்கை விட்டவர் 'சீ.வி.கே.' தான். அதைவிட செம்மணிப் பிரச்சினை போகேக்க, காணாமல் ஆக்கப்பட்டவைக்காக அவர் அந்த ஆமிப் பிரச்சினைக்காலத்திலையும் எவ்வளவு பாடுபட்டவர் எண்டது அப்ப இருந்தவைக்குத்தான் தெரியும். தன்ர அவைத்தலைவர் பதவிக்காக வந்த காசில பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு அந்தாள் உதவி செய்தது கனபேருக்குத் தெரியாது. வலக்கை குடுக்கிறது இடக்கைக்குத் தெரியக்கூடாது எண்டு நினைக்கிற தாலையோ என்னவோ 'சீ.வீ.கே'யைப் பற்றின நல்ல விசயங்கள் வெளியில வாறேலை. எண்டாலும் அவர் வீட்டுக்கட்சியை வீணைக்கட்சியின்ர தியேட்டர் வாசலில கொண்டுபோய் நிப்பாட்டினது மகா பிழைதான். அதுக்காக அவர் அணையாவிளக்குப் போராட்டத்துக்கு வரேக்க, ஏதோ அழையா விருந்தாளிபோல அடிச்சுக் கலைக்கிறதெல்லாம் அந்தப் போராட்டத்தையே கொச்சைப்படுத்திற வேலைதான்.**

**சீ.வி.கே.யர் மட்டுமில்ல, திசைகாட்டி அமைச்சர், எம்.பி.மார் எண்டு இன்னும் சிலரை அங்க நிண்ட கொஞ்சப் பேர் கலைச்சிருக்கினம். போராட்டத்தை ஏற்பாடு செய்தவை மறிச்சும்கூட, இந்தக் குழப்பக் கும்பல் கேக்கேலை. தங்கட தனிப்பட்ட வன்மங்களைத் தீர்க்கிறதுக்குத்தான் இந்தப் போராட்டத்தை அந்தக் குழப்பவாதியள் பாவிச்சிருக்கினம். இப்பிடிச் செய்து போராட்டத்தைக் குழப்பி,அதின்ர நோக்கத்தை அடையவிடாமல் செய்யிறதுதான் அந்தக் குழப்பக் கும்பலின்ர நோக்கமோ தெரியேலை. பிறகு ஒருமாதிரிச் சமாளிச்சு போராட்டம் வெற்றிகரமா நடந்தது. எண்டாலும் அதுக்கு ஒரு கரும்புள்ளிமாதிரி இந்தக் கலைப்புகள் மாறினதென்னவோ உண்மைதான்.**

**15 வருசத்துக்கு முந்தி எங்களில ஆரும் கைவைக்கமுடியாது. எங்களைக் காக்கிறதுக்கும், நியாயம் கேக்கிறதுக்கும் 'பெடியள்' இருந்தவை. ஆனால் இப்ப அவையில்லாததால, எப்பிடியாவது, எந்த வழியிலயாவது எங்களுக்கு நியாயம் கிடைச்சால் காணுமெண்ட மனநிலைதான் எல்லாருக்கும். அப்பிடியானநிலையில எங்கட பக்கம் நிண்டு நியாயம் கேக்க ஆர் வந்தாலும் அவையையும் அணைச்சுக்கொண்டு போறதுதான் புத்திசாலித்தனம். ஆர் குத்தினாலும் அரிசியானால் சரி எண்ட நிலையிலதான் இப்ப எங்கட சனம் இருக்குது. அரிசியாக்கிறதில அரசியல் செய்ய வெளிக்கிட்டா கடைசியில ஒண்டுமே கிடைக்காமல் அழிஞ்சுபோகவேண்டிவந்திடும் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கியது அரசு

## மக்கள் போராட்ட முன்னணி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 26**

**மக்களின் எதிர்பார்ப்புகளைத் தவிடுபொடியாக்கும் வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்துள்ளதாவது-

மின்சாரக்கட்டணம் 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் மின்கட்டணம் தற்போது அதிகரித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன்தொடர்புடையபிரதானசூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது.

அதுவும் நடக்கவில்லை. மாறாக பிள்ளையானுடன் கூட்டுச்சேர்ந்து வாகரையில் ஆட்சி அமைக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

காலியில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மொட்டுக் கட்சியுடன் தேசிய மக்கள் சக்தி இணைந்து ஆட்சியமைக்கின்றது.

தொண்டமான்களின் பிடிக்குள் இருந்து மலையகம் மீட்கப்படும் எனக் கூறியவர்கள், மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சிய மைக்கும்நிலையும் காணப்படுகின்றது.

மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகளைத் தவிடுபொடியாக்கும்வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைகின்றன-என்றார். (எ-44)

# மாபியாக்களுக்கு அடிபணிந்து செயற்படுகின்றது அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 26

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஊக்குவிக்கப்படும் என்று கூறிய அரசாங்கம் இன்று மாபியாக்களுக்கு அடிபணிந்து அனல் மின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கூரைகளின் மீது பொருத்தப்படும் சூரிய மின்தகடுகளுக்கான கட்டணம் ஒரு கிலோவாட் மணிக்கு 37 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக 45 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இது சூரியசக்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை அல்ல. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை நோக்கித் திரும்பும் பலரை அதிலிருந்து விரட்டியடிக்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏராளமான சிறியமட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சூரிய ஆற்றல் தொழில்முனைவோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அனல் மின் நிலையம் மற்றும் எரிபொருள் ஆற்றல்கள்மீது நாடு தங்கியிருக்குமானால் டொலர் செலவையும் எதிர்கொள்ளும். சூரியசக்திப் பயன்பாட்டால் உள்நாட்டுச் செலவு மட்டுமே காணப்படும் - என்றுள்ளது. (எ-இ)



# ஜனாதிபதி நிதியப் பயன்கள் சாதாரண மக்களுக்கு கிட்டும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

ஜனாதிபதி நிதியத்தின் பயன்களைக் கடந்த காலத்தில் பெரும்புள்ளிகளே பெற்றனர். தற்போது அதைச் சாதாரண மக்களுக்கு உரியவகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில், குற்றச்செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. ஒவ்வொருவராக சிறைச்சாலைக்குச் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த நாட்டிலுள்ள பெருவாரியான அரசியல்வாதிகளின் முகவரியாக மகஸின் சிறைச்சாலை மாறக்கூடும். அவர்கள் மக்களின் பணத்தையே கொள்ளையடித்துள்ளனர். கடந்த காலங்களில் ஜனாதிபதிகள்கூட இரு சம்பளங்களை பெற்றுவந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்ததற்குரிய சம்பளத்தையும் பெற்றனர். ஜனாதிபதிக்குரிய சம்பளத்தையும் பெற்றனர். ஆனால் எமது ஜனாதிபதி அவ்வாறு செயற்படுவதில்லை. ஜனாதிபதி மாளிகையைக்கூட நிராகரித்துள்ளார். எமது அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் அப்படித்தான். எந்தவொரு சலுகைகளையும் பெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே பெறுகின்றோம்-என்றார். (எ-26)

# நிதிமோசடிக் குற்றச்சாட்டை மறுக்கும் மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 26

அநுராதபுரத்தில் உள்ள எப்பாவல பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் ஒரு கட்டடத் திட்டத்துக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து 27.5 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், நிதி முறைகேட்டுடன் என்னைத் தொடர்புபடுத்த முயற்சிக்கும் ஊடக அறிக்கைகள் தவறானவையாகும். இந்தக் குற்றச்சாட்டுகள் போலித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்று தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில் இருந்தபோது பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான கட்டடத்தை நிர்மாணிக்கும் போது நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது என நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்தே அவர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். (எ-இ)

# தவிசாளர் தெரிவுகளில் அதிருப்தி; கட்சிப் பதவிகளைத் துறந்த ரவிகரன்?



முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கான தவிசாளர் தெரிவுகளில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பதவிகளிலிருந்து விலகியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளைச் செயலாளர் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேசக் கிளைத் தலைவர் ஆகிய பதவிகளிலிருந்தே நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் விலகியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கட்சிப்பதவிகளிலிருந்து விலகும் முடிவை கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் கடிதம்மூலம் அறிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-26)

# சட்டவிரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 26

யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் மற்றும், யாழ்ப்பாண மாவட்ட கிராமிய சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனுக்கும் இடையே கடந்த சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு தீர்த்தக்கரைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வடக்குக் கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் முற்றாகத் தடைசெய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடற்றொழில் அமைப்பினர் வலியுறுத்தினர்.

அதற்கான தம்மாலான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

உங்கள் கனவுகளை நினைவில் வைத்துக்கொண்டு அவற்றிற்காகப் போராடுங்கள்.


– பௌலோ கொய்லோ –

# கேட்கப்படாத அபலைகளின் குரல்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், இலங்கைக்கான தனது பயணத்தை இன்றுடன் நிறைவுசெய்து புறப்படவுள்ளார். இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கும் மனித உரிமைகள்சார் குற்றச்சாட்டுகள் காரணமாகவும், போர்க்குற்றங்கள் காரணமாகவும் வோல்கர் ட்ரக்கின் இலங்கைப் பயணம் மிகவும் அவசியமானதே. ஆனால், இந்தப் பயணத்தில் தனது இலக்கை அவர் அடைந்தாரா? நீதிக்காக ஏங்கிக் காத்திருக்கும் மக்களுடன் கணிசமான அளவு சந்திப்புகளை மேற்கொண்டாரா? என்ற கேள்விகளுக்கான பதில்கள் மிகவும் ஏமாற்றகரமானவை.

ஜனாதிபதி அநுரகுமார, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் தலைவர்கள், மாகாண ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலர்கள் ஆகியோருடன்தான் அவர் இந்த நான்கு நாள்களையும் கணிசமான அளவுக்குச் செலவிட்டிருக்கின்றார். மாறாக, பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களுடன் மிக்வும் நெருக்கமான கலந்துரையாடல்களை நடத்தியதாக எந்தப் பதிவும் இல்லை. அங்கொன்றும், இங்கொன்றுமான சந்திப்புகளே நடைபெற்றிருக்கின்றன. இந்தப் போக்கடிபோக்கான சந்திப்புகளில் எந்தக் காத்திரமான உரையாடலும் நிகழ்ந்திருக்காது, அதற்குரிய போதிய நேர அவகாசமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதுவொன்றும் பரம ரகசியம் அல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கைக்கு வருகைதந்து சந்தித்த அனைவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தங்களின் கருத்துகளை நிலைப்பாட்டை, அரச தரப்புகளாகவும், அரச எதிர்த்தரப்புகளாகவும் முன்வைத்தவர்கள்தான். இவ்வாறிருக்கையில், அதே நபர்களை அல்லது அந்த நபர்களின் வலைப்பின்னலை இலங்கைக்கு வந்து சந்திப்பதால் என்ன மாற்றம் நிகழ்ந்துவிடப்போகின்றது? அல்லது எத்தகைய தேடலை வோல்கர் ட்ரக் பெற்றுவிடப்போகின்றார்? உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களை நேரடிப் பிரதிநிதித்துவமாகக்கொண்ட சந்திப்புகளைத்தானே அவர் நடத்தியிருக்கவேண்டும்.

போர் முடிவுக்குவந்து ஒன்றரைத் தசாப்தங்களாக நீதிக்காகக் காத்திருக்கும் முகங்களை அவர் நேருக்குநேராகச் சந்தித்திருப்பதே உசிதமான காரியமாக அமைந்திருக்கும். ஏனெனில், அவர்களின் குரல்கள் மனித உரிமைகள் பேரவையில் 'பிரதிநிதித்துவ அடிப்படையில்தான்' பதிவுசெய்யப்பட்டிருக்கின்றதே அன்றி, நேரடியாகப் பதிவுசெய்யப்படவில்லை. எனவே, அத்தகைய ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள் நீதிக்காக மேலெழும்புவதற்கு வோல்கர் ட்ரக் காத்திரமான வாய்ப்பொன்றை வழங்காதமை துரதிர்ஷ்டவசமானது. அரச உயர் மட்டங்களின் கருத்துகளையும் - நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளையும் -ஆளுநர்களின் கருத்துகளையும்தான் செவிமெடுக்கப்போகின்றாரென்றால், *8 ஆயிரத்து 500* கிலோமீற்றர்கள் பயணிக்கவேண்டிய எந்த அவசியமும் இல்லையே. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் சந்திப்புகளில் திருப்தியில்லாவிடினும், அவர் வெளியிடப்போகும் அறிக்கையாவது சத்தியத்தின்பாற்பட்டு அமையும் என்பதுதான் தமிழர்களின் இறுதி எதிர்பார்ப்பு. அதற்காவது அவர் வஞ்சம் செய்யாதிருக்கட்டும்.




# இரண்டு மாதங்களுக்கு எரிபொருள் கையிருப்பு

**கொழும்பு, ஜூன் 26**
**இரண்டு மாத காலத்துக்குத் தேவையான எரிபொருளைப் பெறுவதற்கான திட்டத்தை உறுதிசெய்துள்ளதால் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இருக்காது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.**

எந்தக் காரணத்தாலும் இந்த நாட்டில் இன்னும் இரண்டு மாதங்களுக்கு எரிபொருள் பற்றாக்குறை இருக்காது.
அதன்பின்னர் எங்கிருந்து எரிபொருள் பெறுவது என்பதுதான் பிரச்சினை. பின்னர் போரின் தாக்கம் எரிபொருள் விநியோகத்தை பாதித்துள்ளதா என்பதை ஆராய வேண்டும்.
தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, சட்டவிரோதமாக எரிபொருளைப் பதுக்கிவைப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## மன்னார் கல்விப் பணிப்பாளராக செல்வன் பதவியேற்பு

மன்னார், ஜூன் 26
மன்னார் கல்வி வலயப் புதிய பணிப்பாளாராக இலங்கைக் கல்வி நிர்வாகசேவை சிரேஸ்ட அதிகாரியான கு.செல்வன் கடந்த திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.
மன்னார் கல்வி வலயத்தில் சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக மன்னார் கல்வி வலயப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்த ஐ.டீ. தேவராஜா, மன்னார் கல்வி வலயத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
செல்வன், கிளிநொச்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-60)

## மித்தெனியாவில் துப்பாக்கிச்சூடு; இருவர் பலி

கொழும்பு, ஜூன் 26
மித்தெனிய தொரகொலயாப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.
குறித்த துப்பாக்கிச்சூட்டில் 25 மற்றும் 30 வயதுக்குட்பட்ட இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)




## பொலிஸில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 26
பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் உப பொலிஸ் பரிசோதகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரங்களைக் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பார்வையிடலாமெனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)



## போலி மருத்துவச் சான்றிதழ் மருத்துவர்மீது நடவடிக்கை


கொழும்பு, ஜூன் 26
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு போலியான மருத்துவச் சான்றிதழ் வழங்கிய மருத்துவருக்கு எதிராக இலங்கை மருத்துவசபை நடவடிக்கை எடுத்துள்ளது.
கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி பிரபல மருத்துவமனையொன்றின் பெயரில் போலியாகத் தயாரிக்கப்பட்ட கடிதத்தலைப்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட மருத்துவமனை இலங்கை மருத்துவசபைக்கு முறைப்பாடுசெய்திருந்தநிலையில் மருத்துவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. (ச-41-6)

நாளை
வெள்ளிக்கிழமை - ஆனி 13
27.06.2025
சுபநேரம் : 07.25- 08.55
ராகுகாலம் : 01.25-02.55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் விஜயரட்ணம் (விசுவு)

யாழ் உடுவிலைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை வீமன் காமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜயரட்ணம் அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தவமணி தம்பதியின் அன்பு மகனும் நல்லநாதன்-மீனாட்சியம்மா தம்பதியின் அன்பு மருமகனும் பானுமதியின் பாசமிகு கணவரும் சரண்யா, கலைவாணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைகுந்தன் அவர்களின் மாமனாரும் தக்சிகா, வேபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
077 419 7258, 077 008 6252

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 03 . 1941

இறப்பு
25 . 06 . 2025



## குமாரசாமி கனகலிங்கம்

காரைநகர் சத்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும் கோவளத்தையை வசிப்பிடமாகவும் தற்போது சுதுலைவீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை வாழ்விடமாகவும் கொண்ட குமாரசாமி கனகலிங்கம் அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-விசாலாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஈஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகேஸ்வரன், கீதாரஞ்சினி, சாந்தினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவமலர், சர்வானந்தன், திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனோஷ், கேஷனா, தனனிஜா, சப்னா, ஜனிஷா, கிஷான், கேதுஷா, ஸேனுஜா, கேஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வீதி,
தாவடி தெற்கு,
தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 474 4674

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 11 - 1953

மறைவு
23 - 06 - 2025



## செல்வேந்திரன் நகுலாம்பிகை

வேலணை 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வேந்திரன் நகுலாம்பிகை அவர்கள் கடந்த (23.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கால்ஞ்சென்றவர்களான இராசையா - இலட்சுமி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியின் அன்பு மருமகளும், செல்வேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், யாழினி (ஆசிரியர் - யா/செட்டிபுலம் அ.த.க பாடசாலை- வேலணை), காந்தரூபன் (கனடா), நளினி (தையல் போதனாசிரியர் பிரதேச செயலகம் - வேலணை) அன்பரசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானகுமார், கார்த்திகா (கனடா), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்முகநாதன், கிருஸ்ணநாதன், கனகாம்பிகை, கேதாரகௌரி, பத்மநாதன், நடேசநாதன், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கத்தின் உடன்பிறவாச் சகோதரியும் செல்வனேஸ்வரி, புஸ்பராணி, விக்னேஸ்வரி, இரத்தினசிங்கம் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சித்திரா, சுவேந்தினி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ரகீர்சன், பிரகீர்சனி, மிதுசன், சிரோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிஷாந்தன், நிதர்சினி, யதுஷா, சுரேகா, டிஷாந், விதுஷன், சிவப்பிரியா, பாணுப்பிரியா ஆகியோரின் பெரியதாயாரும் உமாதேவி, ரவீந்திரன், நிலானி, சிந்துயா, அஜந்தன், நதுஷா, நதுஷன், சதுஷன், சனுசியா ஆகியோரின் அத்தையையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
சி.செல்வேந்திரன் (கணவர்)
077 691 7157 , 077 507 5431

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 01 . 1935

மறைவு
24 . 06 . 2025



## இராமநாதன் மகேசன்

அரசடி கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இராமநாதன் மகேசன் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வரதராஜன் (ஜேர்மனி), முரளிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜிதா (ஜேர்மனி), சுபாஜினி ஆகியோரின் மாமனாரும், கனிமொழி, சாயிராம், சுருத்திகா, சந்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

அரசடி, கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 58691) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13.08.1944

உதிர்வு 21.06.2020



### அமரர் ருக்குமணி ஆனந்தவேல்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: பூர்வபக்க பிரதமை

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய் மலர்ந்த
எம் அருமை அன்னையே!
அணையாத சுடராய் எல்லோர்
மனதிலும் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்

விண்ணில் இருந்தாலும்
எமக்கு ஒளி விளக்காய் ஒளி தந்து
வழிநடத்துவீர் அன்னையே!

உங்கள் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 58641) E

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 13.05.2025 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கனகரெட்ணம் லோகானந்தம்

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரண நிகழ்விலும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மாசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல 10 பழைய பெற்றோல் நிலைய வீதி
உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்

குடும்பத்தினர்.

(CS 58651) E

# மரண அறிவித்தல்

## சிவனடியார் ஈஸ்வரி



சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனடியார் ஈஸ்வரி அவர்கள் கடந்த (21.06.2025) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவனடியார் அவர்களின் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சரஸ்வதி, நமசிவாயம், மகேஸ்வரி, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும், புஷ்பராணி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகாம்பாள், இரத்தினசிங்கம் (அப்பு), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் அனிதா (செல்வம்), தனபாலன் (கொழும்பு), லோகாம்பிகை (பவுன் - லண்டன்), தங்கராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், மயில்வாகனம் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சந்திராதேவி, செல்வகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் புஸ்பவதி (கொழும்பு), மனோகரன் (லண்டன்), உமாதேவி ஆகியோரின் மாமியாரும் மனோரஞ்சிதம் (கனடா), அருந்ததி (சுவிஸ்), உதயகுமார் (டோகா), சந்திரகுமார் (கொழும்பு), சகிலா (கொழும்பு), கிருஷ்ணகுமார் (சுவிஸ்), பிரதீப்குமார் (லண்டன்), யோகேஸ்வரன் (வவுனியா), காஞ்சனா (சுவிஸ்), கோசலா (லண்டன்), சாந்தா (பிரான்ஸ்), சதீஸ் (கனடா), நிக்சிதா (கொழும்பு), துஷியா (லண்டன்), கிருஷிகன், லோகிதா, ஹபிதா, வருணிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரெஜினா (சுவிஸ்), ரஜித் (சுவிஸ்), சசின் (கனடா), சாஷ்னி (கனடா), டானியா (சுவிஸ்), வைஷ்ணவி (கொழும்பு), ரித்திக்சாய் (கொழும்பு), சஞ்சயன் (கொழும்பு), திஷாயினி, தியானா (சுவிஸ்), ஹர்ணிஷ், ஆத்மிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 09:00 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புனித திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 01.10.1934

மறைவு 21.06.2025

தொடர்பு :
+94 77 803 0113
(சந்திரன்)

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58675) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆயுதங்கள் நாட்டுக்கு வரவில்லை!

## பொன்சேகா அழுத்தம்திருத்தம்

கொழும்பு, ஜுன் 26

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் அண்மையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் முட்டாள்த்தனமான கருத்துக்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

'கொழும்புத் துறைமுகத்தில் இருந்து அண்மையில் 323 கொள்கலன்கள் எந்தப் பரிசோதனைகளும் இல்லாமல் விடுவிக்கப்பட்டன. அதில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் இருந்தன' என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அண்மையில் தெரிவித்திருந்தார். அர்ச்சுனாவின் கருத்துக்களையே, தவறானவை என்றும், முட்டாள்த்தனமானவை என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

பைத்தியக்காரர் ஒருவர் வெளியிட்ட கருத்தாகவே அதனை நான் பார்க்கின்றேன். கொள்கலன்களில் என்ன இருந்தது என்பது எமக்குத் தெரியாது. அவை சோதனையின்றி

விடுவிக்கப்பட்டதையும் அனுமதிக்க முடியாது. அவற்றில் புலிகளின் ஆயுதங்கள் இருந்தன என்று கனவு காணவும் முடியாது. எதுவும் அறியாமல், தன்னை வீரனாக காண்பித்துக் கொள்வதற்காக அவ்வப்போது அர்ச்சுனா அறிவிப்புகளை வெளியிடுகின்றார். இப்படியான மனநிலையில் இருக்கும் ஒருவரின் கருத்து தொடர்பில் அவ்வளவு முக்கியத்துவம் வழங்கவேண்டியதில்லை' - என்றார். (ம-44)

**நாஹா மருத்துவ நிலையம்**

கல்லீரல், சிறுநீரகம் போன்ற உள்ளுறுப்புக்களின் பாதிப்பும் அதன் மோசமான நிலையும், நீரிழிவு நோய் தரும் கை, கால் விறைப்பு, மரத்துப் போதம், பாரிசவாதம் - கை, கால் செயலிழப்பு அற்புத மருந்தியல்

தொடர்பு: 077 321 2740

வங்கிமுன் லேன்
சாந்தவத்தை வயிரவர் கோவிலடி
மானிப்பாய்

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# வத்திக்கான் பிரதிநிதி இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஜுன் 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போக்குத் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வத்திக்கானின் வெளிவிவகாரப் பிரதிநிதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்ததாவது:-

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றச்சாட்டை முன்வைத்த போது நான் வத்திக்கானில் இருந்தேன். வத்திக்கானில் பாப்பரசருக்கு அடுத்த நிலையில் உள்ளவரை சந்திப்பதற்காகவே நான் சென்றிருந்தேன். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விரிவாக உரையாடப்பட்டது. பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை நாம் கோரினோம்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விவாதத்தைக் கோரவுள்ளோம். மேற்படி சம்பவம் தொடர்பில் பேராயர் வெளியிட்ட கருத்து நீதியானது. ஏனெனில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் எந்தவொரு பரிந்துரையும் இந்த ஆட்சியின்கீழ் அமுலாகவில்லை. வத்திக்கானில் நடைபெற்ற சந்திப்புகளின்போதும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளேன்.

வத்திக்கானின் வெளிவிவகாரப் பிரதிநிதி எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பரில் இலங்கைக்கு வரவுள்ளார். மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தவே அவர் வருகின்றார்' - என்றார். (ம-44)

**INVITATION FOR BID 2025 /01**
**OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT, JAFFNA.**

1. The **Chairman, Regional Procurement Committee, on behalf of the Assistant Commissioner of Local Government, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Road construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-06-26 To 2025-07-09** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam - Jaffna (T.P:021 205 0356, Fax:021 205 0348) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna on or before 10:30 hrs as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna** commencing at **10:30 hrs as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-06-26 To 2025-07-09 |
| | Pre-Bid Conference | At 10:30 hrs on 2025-06-30 |
| | Closing and Opening of Bids | At 10:30 hrs on 2025-07-10 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| PSDG/NP/JAF/CPS/2025/LAR/01 | Reconstruction Of Manatkadu Road at Maravanpulavu, Chavakachcheri Pradeshiya Sabha | 15.254 | 84 | C7 or above (Roads) | 3,500.00 | 153,000.00 | 23-10-2025 | 77 Days |

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna.
Date - 2025-06-26
(CR 45351) E-1

**மரண அறிவித்தல்**

**பாலகிருஷ்ணன் நல்லம்மா**



தொல்புரத்தை பிறப்பிடமாகவும் காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் நல்லம்மா அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கண்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


தோற்றம் 16.02.1941 — மறைவு 25.06.2025

ஆயிலி காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்

**10ம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 10 . 05 . 1963



மறைவு 16 . 07 . 2015

**நந்தகுமார் இராசலிங்கம்**

திதி : பூர்வபக்ஷ பிரதமை (26.06.2025)

ஆண்டுகள் பத்து கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.


நினைவுகளுடன்
சி.சிவாஜினி

(CS/57575) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1946 — மறைவு 25 . 06 . 2025



### செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் இரத்தினசிங்கம்

(அரச கட்டட ஒப்பந்தகாரர்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது" (திரு 116.5)

நெடியகாடு வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை (பெரியதம்பு) - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளப்பு - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிவிற்றுவா (ரஞ்சினி) அவர்களின் பாசமிகு கணவரும், ஜெசிந்தா பாமினி (ஆசிரியர், தி/திவ ஔவை நகர் அ.த.க பாடசாலை பன்குளம்), செபஸ்ரியன் றோய் (சிரேஷ்ட உத்தியோகத்தர் ஜனசக்தி பினான்ஸ்), யாழினி (உதவி அஞ்சல் அதிபர் பருத்தித்துறை), ஆகியோரின் பாசமிகு தந்தையும், எமல்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், மொறவேவ திருகோணமலை), றொஷானி (வங்கியாளர் இலங்கை வங்கி வேலணை), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பெனடிக்ற் குலசிங்கம் மற்றும் அலோசியஸ் ராஜசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற பேனாட் குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பிறிசில்லா மற்றும் காமல்திரேசா மற்றும் காலஞ்சென்ற செலின் மற்றும் மேரி யூபிறேசியா (ராணி - சில்லாலை), பிரான்சிஸ் சேவியர் (டென்மார்க்), அன்ரனி ஜோசப் (பாபு - டென்மார்க்), மேரி மாகிறெற் (ஜெயமணி - பிரான்ஸ்), மேரி மக்ரலின் (லீலா - இத்தாலி), மேரி செலின் (இத்தாலி), மேரி பற்றீசியா (கமலா - லண்டன்), டொன் பொஸ்கோ (டென்மார்க்), மேரி லூட்ஸ் பொலின் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க திருப்பலி வல்வெட்டித்துறை புனித செபஸ்ரியார் ஆலயத்தில் நாளை (27.06.2025) வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணியளவில் ஒப்பு கொடுக்கப்பட்டு பின்னர் வல்வெட்டித்துறை புனித செபஸ்ரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

நெடியகாடு, வல்வெட்டித்துறை. 021 226 4128, 077 474 7278, 077 283 3545, 077 828 6611

# தமிழ்மக்களின் பிரதிநிதிகளுடன் வோல்கர் ட்ரக் நேற்றுச் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக்குக்கும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று இரவு சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சாணக்கியன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-26)

# கட்டுடையில் வாள்வெட்டு; ஒருவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜுன் 26

யாழ்ப்பாணம் - கட்டுடைப் பகுதியில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் பயணித்த குடும்பத் தலைவரை இடைமறித்து, மிளகாய்த்தூள் கரைசலை ஊற்றியே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-125)

## செம்மணியில் உறைந்த உதிரங்கள் வீதி நாடகம் ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஜூலை 26

செம்மணி மனிதப்புதைகுழியில்புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதிகோரியும், சர்வதேசக் கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் எனும் தன்னார்வ இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அணையா விளக்குப் போராட்டத்தின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை "உறைந்த உதிரங்கள்" எனும் தலைப்பிலான வீதி நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

யாழ். களரி ஆற்றுகைக் குழுவின் ஏற்பாட்டில் இந்த நாடகம் ஆற்றுகைப்படுத்தப்பட்டது. (ச-66)



## மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 07 - 1948 — மறைவு 25 - 06 - 2025



### லிங்ககுமார் ராஜலக்ஷ்மி

யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட லிங்ககுமார் ராஜலக்ஷ்மி அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசமணி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - சொர்னகிரி தம்பதியின் அன்பு மருமகளும், சேனாதிராஜா லிங்ககுமார் அவர்களின் அன்பு மனைவியும், தெய்வீகன், சாத்வீகன், சாம்பவி, ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேனுஜா, தயாளினி, முகுந்தன், ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசவி, யஸ்வினி, கேதீக்ஷா, லிதுன் ஆகியோரின் பேர்த்தியும், பாலசிங்கம், கந்தசாமி, இரஞ்சிதமலர், வீரசிங்கம், காலஞ்சென்ற இராசரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மங்களராணி, சந்திரகுமார், சொர்னவதனி, ரமணிசுந்தர், கிரிஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கூழாவடி ஆனைக்கோட்டை இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: பிரதாப் வீரசிங்கம்

(CS58692) D*

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 07 - 1945 — மறைவு 26 - 06 - 2025



### சிவயோகம் ஜயாத்துரை

அராலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவயோகம் ஜயாத்துரை அவர்கள் நேற்று (25.06.2025) புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், சுப்பிரமணியம் ஜயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.


அன்னார் ஜயாத்துரை தனபாலசிங்கம் (கனடா), ஜயாத்துரை சிவபாதம், ஜயாத்துரை செல்வராசா (சுவிஸ்), தவமணி ஜயாத்துரை செல்வராசா, ஜெயசீலன் தவவாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், த. ரமணி (கனடா), சி. உதயராணி, செ. உதயராணி (சுவிஸ்), க. சிறிகரன், ஜெ. தாரிணி, அ. டக்ளஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யது, நிரோ, தனுசன், மிலோஜினி, கஜனீசன், அபிலாஷ், கவிதா, கபிலன், சரணியா, அர்ஷஹி, ஆருஷன், கெவின், டெல்வின், ஜெசி, ஆகியோரின் அன்பு பேர்த்தியும், இளவரசி, இளையவன்,நிலா, விகாஷ் ஆகியோரின் பூட்டியுமாவார், காலஞ்சென்ற மனோன்மணி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற முத்துமாரி, காலஞ்சென்ற அன்னம்மா, பவளம்மா, ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (26.06.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தகனகிரியைகளுக்காக பூநாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைலாசப்...

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.
'இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு சர்வதேசம் ஊடாகவே நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இந்த விடயத்தில் சர்வதேச நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் முழுமையாகத் தலையிடவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் எமது நிலத்தை அபகரிக்கக்கூடாது' - என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள்.
இந்த வீதியின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் நேற்றுப் பயணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## அணையா...

யிட்டு, இந்தப் போராட்டம் தொடர்பில் வெளிப்படுத்திய ஊடகவியலாளர்களை, மனித உரிமைகள் ஆணையாளரின் வருகையின்போது புறக்கணித்தமை பலரையும் அதிருப்திக்கு உள்ளாக்கியது. ஊடகவியலாளர்களுக்கும், சமூக ஊடகங்களில் காணொலிகளையும், ஒளிப்படங்களையும் பதிவிடுவோருக்கும் வித்தியாசம் தெரியாமல் அந்தத் தரப்பினர் நடந்துகொண்டனர். அத்துடன், இறுதிநேரத்தில் முறையான திட்டமிடலையும் ஏற்பாட்டுக்குழுவினர் மேற்கொள்ளவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (அ-ம-26)

## செம்மணிப்...

கட்ட அகழ்வுக்கான பாதீட்டுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கி, அதற்குரிய நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, இன்றையதினம் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.
துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் தொடரவுள்ளன. நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நானாட்டான்...


நானாட்டான் பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது. இதன்படி, தவிசாளரான அன்ரன் அன்றூ தெரிவுசெய்யப்பட்டார்.
நானாட்டான் பிரதேசசபையின் முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. தவிசாளர் தெரிவுக்காக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அன்ரன் அன்றூ ராஜன் மற்றும் இலங்கைத் தமிழரசு கட்சி உறுப்பினர் ஜெறோம் இருதயதாஸ் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.
17 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஓர் உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார். பகிரங்க முறையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 10:06 என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அன்ரன் அன்றூ ராஜன் வெற்றிபெற்றார்.
உபதவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஞானராஜ் ஜோசை போட்டியின்றித் தெரிவானார். (அ-ம-56)

## செட்டிகுளம்...

வவுனியா - வெண்கல செட்டிகுளம் பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ஐக்கிய மக்கள் சக்தி) ஆட்சியமைத்தது. இதன்படி, தாஜுதீன் மொகமட் இம்தியாஸ் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.
வவுனியா செட்டிகுளம் பிரதேசசபையின் முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தாஜுதீன் மொகமட் இம்தியாஸும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தாவீது இசையாஸ் மிராலும் முன்மொழியப்பட்டனர். 18 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 12:06 என்ற அடிப்படையில், பகிரங்க வாக்கெடுப்பை நடத்துமாறு கோரப்பட்டது. இதன்போது 11:06 என்ற அடிப்படையில் தாஜுதீன் மொகமட் இம்தியாஸ் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.
உபதவிசாளராக தமிழரசுக் கட்சியை சேர்ந்த தேவசகாயம் சிவானந்தராசா தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-110)

## முசலி...

முசலிப் பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக கியாதியன் சாயூ நலீம் தெரிவானார்.
முசலி பிரதேசசபையின் முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. தவிசாளர் தெரிவுக்காகத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கியாதியன் சாயூ நலீம் மற்றும் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் முகமது காமில் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.
சபையின் 16 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினார்கள். 09:07 என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் வெற்றிபெற்றார். ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அப்துல் தன்ஸீல் உபதவிசாளராகத் தெரிவானார். (அ-ம-56-213)



இராணுவத்தால் கிருஷாந்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டதை வெளிப்படுத்தும் வகையில் செம்மணியில் நேற்று இடம்பெற்ற 'அணையா விளக்கு' போராட்டத்தின்போது, குருதிக் கறைபடிந்த பாடசாலைச் சீருடையொன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (ம-26)



## தந்தை...

செல்வாவின் சிலை நேற்றுக் காலை உடைக்கப்பட்டுள்ளது.
சிலையின் தலைப்பகுதி முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில், அது சிலைக்கு அருகாக இருந்து மீட்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு முன்வைக்கப்பட்ட நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபராக ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டனர். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-56-213-60)


# மணிவிழா வாழ்த்து

**சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி**
**Dr. சி. சுதோக்குமார் (M.B.B.S)**



26.06.2025 இன்றைய பிறந்த நன்னாளில் வாழ்த்துகின்றோம்.
தென்மராட்சி பிரதேசத்தின் அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்தி அன்பான, பண்பான ஆளுமையால் வழிகாட்டி சீரிய வழியில் எம்மை வழிநடத்திய பெருமகன். அவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது மக்களுக்கான மருத்துவப் பணி தொடரவும், ஓய்வுகாலம் சிறக்கவும் இறை அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
**அம்பிகா டிஸ்பென்சறி**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்கள்...

செய்யவும் ஊடகங்களுக்குப் பொலிஸாரால் கடும் பாதுகாப்புக் கெடுபிடிகள் வழங்கப்பட்டன.
கடந்த அரசாங்கங்களின் காலத்தில், மனிதப் புதைகுழிகளை சர்வதேசப் பிரதிநிதிகள் பார்வையிடும்போது சர்வதேச ஊடகங்கள்கூட ஒளிப்படங்களைப் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறிருக்கையில், தற்போதைய அரசாங்கத்தின் ஊடக அடக்குமுறை கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

## செம்மணிப்...

டார். கடந்த 23ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், நேற்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தின் பிரதான அம்சமாகவே, அவர் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சென்றார்.
மூன்று சிறுவர்கள் உட்பட 19 பேரின் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட அந்தப் பகுதி, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் 'மனிதப் புதைகுழி' எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனால், செம்மணி மனிதப் புதைகுழிக்கும் வோல்கர் ட்ரக் செல்லவேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்திவந்தனர். இவ்வாறான பின்னணியிலேயே அவர் அங்கு சென்றிருந்தார்.
செம்மணிப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கான நிதி விடுவிக்கப்பட்டு, இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் அங்கு நேற்றுக் கள ஆய்வில் ஈடுபட்டமை முக்கியமான விடயமாக அமைந்துள்ளது. (அ-ம-26)

## அரசியல்...

சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரன் ஆகியோரே இவ்வாறு போராட்டக்களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களை நோக்கி மிகவும் கீழ்த்தரமானதும், தரக்குறைவானதுமான வார்த்தைகளும் கொந்தளிப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டன.
அத்துடன், அரசியற்கட்சிகளின் தலைவர்கள் பயணித்த வாகனங்கள் மீதும் கொந்தளிப்பாளர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது.
நீதிகோரி மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற அரசியல்வாதிகள் இவ்வாறு நடத்தப்பட்டுள்ளமை பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (அ-ம-26)

## போராட்டத்தை...

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின்போது, கொந்தளிப்பாளர்கள் சிலரால் தான் வெளியேற்றப்பட்டமைக்கு அமைச்சர் சந்திரசேகர் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன், போராட்டத்தை ஆதரித்தே அங்கு சென்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு நாம் முழு ஆதரவையும் வழங்குகின்றோம். ஆனால், நீதிக்கான இந்தப் போராட்டத்தை குழப்பவாதிகள் சிலர் தங்களின் சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்த விளைகின்றமைக்குக் கண்டனம் தெரிவிக்கின்றோம்.
செம்மணிப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தேன். செம்மணிப் புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யாரென்பது மக்களுக்குத் தெரியும். இந்தக் கொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் மக்கள் எம்மிடமும் கூறியுள்ளனர். எனவே, சம்பவ இடத்துக்கு நான் சென்றதற்குக் காரணம் எனது மக்களின் வலியைப் பகிர்ந்துகொள்ளத்தான்.
செம்மணியில் குழப்பம் விளைவித்த இளைஞர்கள் சிலர், செம்மணிப் புதைகுழிச் சம்பவங்கள் நடந்த காலகட்டத்தில் பிறந்திருந்தார்களா என்பதுகூடத் தெரியாது. இப்படியானவர்களே அரசியல்வாதிகளை விரட்டியடிக்கும் செயலில் ஈடுபட்டனர்.
'அணையா விளக்குப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றோம், அதில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும்' என அழைப்பு விடுத்தனர். 'ஆளுங்கட்சியினரும் பங்கேற்கவேண்டும்' என குறிப்பிட்டுக் கூறினார்கள். இதனால், ஓர் அமைச்சராக அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றேன்.
ஓர் அமைச்சராக நான் மக்களின் போராட்டத்தில் கலந்துகொண்டால், அது அந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் என்பதே உண்மை. அந்தச் செய்தி சர்வதேசம் வரை செல்லும். வரலாற்றிலும் பதிவாகும். ஆனால் குழப்பவாதிகளுக்கு இதெல்லாம் புரியவில்லை.
எமது கட்சித் தலைவர் உட்பட தோழர்களும் கொன்று புதைக்கப்பட்டனர். இப்படியான சம்பவங்களுக்கு நீதிவேண்டும். அதற்கான தேடலை நோக்கியே நாம் பயணிக்கவேண்டும். இனவாதம், மதவாத மற்றும் பிரதேச வாதத்துக்கும், பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் எமது ஆட்சியில் முடிவுகட்டப்பட்டுள்ளது. ஒரு சிறு கும்பல் எம்மை விரட்ட முற்பட்டாலும் நாம் குரோத மனப்பான்மையுடன் செயற்படப்போவதில்லை.
ஓர் அமைச்சராக நான் பாதுகாப்புத் தரப்புடன் சென்றிருக்கலாம். சம்பவத்தின் பின்னர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. தனி மனிதனாகவே நான் சென்றேன். ஏனெனில் மக்கள் எம்முடன் இருக்கின்றனர் - என்றார். (அ-ம-26)

## இராணுவப்...

பிரசன்னம் தொடர்பில் கேட்டறிந்தார் என்று வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினருக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-
மீள்குடிய மர்வு - காணி விடுவிப்புத் தொடர்பில் தற்போதைய நிலைமைகளை ஆணையாளர் கேட்டார். 'மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதற்கு அமைவாக படிப்படியாக காணிகள் விடுவிக்கப்படுகின்றன. இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன' என்று சுட்டிக்காட்டினோம். மேலும், 'வன வளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பன இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் காணிகளை சுவீகரித்துள்ளன. இதனால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் விவசாயக் காணிகள் என்பன இழக்கப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் மாவட்ட ரீதியிலான குழுக்களை அமைத்து இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது' என்பதையும் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தினேன்.
காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பிலும் ஆணையாளரும், ஐ.நா. வின் வதிவிடப் பிரதிநிதியும் விடயங்களைக் கேட்டறிந்துகொண்டனர். அந்தப் பொறிமுறை சரியானது என்றும், ஆனால் மக்களுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் எனவும் மாவட்டச் செயலர்கள் இதன்போது ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினர்.
மேலும், ஆணையாளர் இராணுவப் பிரசன்னம் மற்றும் மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் மேற்கொள்வது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் கேட்டறிந்தார். முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அந்த நடவடிக்கைகள் குறைந்துள்ளன என்றும் இன்னமும் சில பிரச்சினைகள் அதில் உள்ளன எனவும் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினேன்.
காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், போதைப்பொருள் பயன்பாடு, இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் தொடர்பிலும் ஆணையாளர் கேட்டறிந்து கொண்டார்.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோரும், ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினரும் பங்குபற்றினர். அத்துடன் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## அணையா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் கடந்த 23ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தார். இதையடுத்து, செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' எனும் தன்னார்வ இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் செம்மணி வளைவுப் பகுதியில் ஆரம்பமான 'அணையாவிளக்குப் போராட்டம்' நேற்றுப் புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. 'அணையா விளக்குப் போராட்டத்தின்' ஒரு கட்டமாக நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டமும், கையெழுத்துச் சேகரிப்பும் நடத்தப்பட்டன.
நேற்று மாலை 4.45 மணியளவில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் போராட்டக்களத்துக்கு அவர் வருகைதந்தார். செம்மணியில் கொல்லப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்துக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்திய அவர் போராட்ட ஏற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். 'அணையாவிளக்குப் போராட்டம்', 'செம்மணி மனிதப் புதைகுழி' தொடர்பான விடயங்களையும் கேட்டறிந்துகொண்டார்.

**இதன்போது**

1. இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஊடாக ஐக்கியநாடுகள் பாதுகாப்பு அவைக்கு விடயம் பாரப்படுத்தப்பட்டு, இதனூடாகச் சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றைச் சாத்தியப்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் முடுக்கிவிடவேண்டும்.

2. செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள்ளீட்டை வழங்கவும், கண்காணிப்பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவேண்டும்.

3. மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தமது சமூகத்தின் வளங்களைப்பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளீட்டைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்கவேண்டும்.

4. புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் கோரப்படும் அனைத்து நிதிக் கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டுமென அழுத்தம் கொடுக்கவேண்டும்.

5. இதுவரை வெளிவந்த தகவல்கள் பிரகாரம் அனைத்துப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்வுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவேண்டுமென வலியுறுத்தவேண்டும்.

6. ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்துக்கமைய இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கு ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் அதிகாரிகளுக்குத் தங்கு தடையற்ற அனுமதி இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படவேண்டும்.

ஆகிய ஆறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையெழுத்துகளுடன் கூடிய கோரிக்கை மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.
கோரிக்கை மனுவைப் பெற்றுக்கொண்ட அவர் கோரிக்கைகளுக்கான பதிலை விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை ஊடாகப் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுவாழ்வு சிகிச்சை பிரிவு திறப்பு விழா

## வடபகுதியில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படும்

# "Re - Habilitation Treatment Unit"

## மறுவாழ்வு மற்றும் இயன் மருத்துவ சிகிச்சை பிரிவு

# Venus Speciality Hospital (PVT) LTD

# வீனஸ் விசேட வைத்தியசாலை (வரையுள்ளது)

**இப்பிரிவானது எமது வைத்தியசாலையில் 27.06.2025 (வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணிக்கு சுபமுகூர்த்த வேளையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இத்தருணம் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.**

**மருந்தில்லா பக்கவிளைவற்ற நோய்களை குணமாக்கும் பிரிவு**

### What is Re - habilitation Treatment? மறுவாழ்வு சிகிச்சை என்றால் என்ன?

இது முற்றுமுழுதாக மருத்துவ துறை சார்ந்த :"மருந்தில்லா சிகிச்சைப் பிரிவு" உடல் உறுப்புகளின் இயக்கம். பயன்பாடும் பாதிக்கப்பட்டு நோயில் இருந்து மீளமுடியாமல் தவிக்கும் போது பக்க விளைவு. இரசாயன கலவை அற்ற நவீன யுகத்திற்கேற்ப அதி உயர் தொழிநுட்ப முறையில் வடிவமைக்கப்பட்ட கருவிகளின் உதவியுடன் கூடிய இவ்வைத்திய முறையை அநேக வைத்தியர்கள் நரம்பியல் வைததியர்கள். என்பு முறிவு நெறிவு வைத்தியர்கள். பொது சத்திரசிகிச்சை வைத்தியர்கள். அகஞ்சுரப்பியியல். மூட்டுவாதவியல் வைத்தியர்கள். குழந்தைகள் வைத்தியர்கள் அனைவராலும் பரிந்துரைக்கப்படும் நவீன சிகிச்சை முறையாகும்.

### இம் மருத்துவ முறையானது

- வாழ்வின் தரத்தை கூட்டிடவும்
- காயங்களின் தீவிரத்தை குறைத்திடவும்
- ஊனத்தினை சரிசெய்யவும்
- ஊனமுற்றவர்கள் திரும்பவும் தமது வாழ்க்கைத் தரத்தை ஏற்றிடவும்
- பக்கவாதம் (Stroke/ (VA) பாதிப்பின் பின் வெகு சீக்கிரம் குணமடையவும்.
- முதுகு நரம்பு / முள்ளந்தண்டு பாதிப்பின் பின்னரான நிவாரண சிகிச்சையாகவும்.
- பெரிய அறுவை சிகிச்சையின் பின்னரான நிவாரண சிகிச்சையாகவும்.
- கோமாவின் பின் மீள் எழுச்சி சிகிச்சையாகவும்.
- நரம்பு பாதிப்பின் பின் Re Habititation சிகிச்சையாகவும்.
- குழந்தைகளுக்குரிய நரம்பு மண்டல பாதிப்பு (Cerebral Paulsy - cp) ஏற்படும் விளைவுகளை சரிப்படுத்தவும்
- அதி தீவிர (ICU) சிகிச்சையின் நிவாரணத்தில் ஒரு பகுதியாகவும். மேலும் பல உடல் நார்ந்த மீள் எழுச்சி (Re - Habititation) சிகிச்சைகள் உள்ளடங்கிய பிரிவு.

**இச்சிறப்பியல்புகளைக் கொண்ட இவ்வைத்திய சேவையினை வீனஸ் விசேட வைத்தியசாலை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது.**


# சட்டவிரோத மணல் கடத்தல் 3 டிப்பர்கள் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26



புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தினால் வழங்கப்படும் மணல் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரத்தில் மாற்றம் செய்து சூட்சுமமான முறையில் மன்னாரில் இருந்து மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 டிப்பர்களைத் தனங்கிளப்புச் சந்தியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

சாவகச்சேரிப் பிரதேச போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது. (ச-28)


### வேலை ஆட்கள் தேவை

சமையல் உதவியாளர்
சுத்திகரிப்பாளர்
1800/- முதல் 2000/- வரை
(நாளொன்றுக்கு)
தங்குமிடம், உணவு இலவசம்.
077 991 2628

### சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
077 377 4446


# விழிப்புணர்வு நடைபவனி !

மன்னார், ஜூன் 26

மன்னார் மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலுக்கு எதிரான மனநிலையை உருவாக்கும் முகமான விழிப்புணர்வு நடைபவனி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாந்தை பொது சுகாதார மருத்துவ அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையில் இடம்பெற்றது. இந்த நடைபவனி மன்னார் அடம்பன் பாடசாலையில் இருந்து பிரதேச செயலகம் ஊடாக நகர்ப் பகுதிவரை இடம்பெற்றது. (ச-22,56)

## இலவச பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.நீரிழிவுக்கழகம், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் திருநெல்வேலி சந்தை வளாகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறவுள்ளது. நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற்திணிவுச்சுட்டி போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (ச-25)

### பகிடிவதை
# 22 மாணவர்கள் இடைநீக்கம்

கொழும்பு, ஜூன் 26

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களைப் பகிடிவதை செய்தனர் எனக் கூறப்படும் 22 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைதீன் தெரிவித்துள்ளார்.

பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்களே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 05 . 1956



மறைவு
20 . 06 . 2025

## அசோகமலர் அருந்தவநாதன் (மாலா)

**(நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பழையமாணவி)**

யாழ். நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Harrow ஐ வசிப்பிட மாகவும் கொண்ட அசோகமலர் அருந்தவநாதன் அவர்கள் கடந்த (20-06-2025) வெள்ளிக்கிழமை நீர்வைக்கந்தனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அருந்தவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், துளசி, கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன், மாதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் செல்வராணி, இந்திராணி, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கதிரமலை ஜெகசோதி, பத்மநாதன், கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மகாத்மசீலன், சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், ஆனந்தவேல் மற்றும் சோதிலிங்கம், ஆகியோரின் பாசமிகு மருமகளும், கனடாவைச் சேர்ந்த மாலதி, மதன்ராஜ், செந்தூரன், தர்மினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், கனடாவைச் சேர்ந்த சுபன், சுமணன், சுபாங்கி, தினேஷ், பிரியா(காயத்ரி), உதயா(பத்மகௌரி), ஷாமி(சண்முகப்பிரியா) ஆகியோரின் அன்பு மாமியும், அர்ஜுன், மாயன், கைலன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாதன் (கணவர்)
+44 740 401 5139
+44 208 864 3399

தகவல் :
குடும்பத்தினர்

(CS/58682) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 26
அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றைக் கலைக்கும் அமர்வு கல்லூரியின் தியான அரங்கில் இடம்பெற்றது. சபாநாயகர் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு பிரதமர் உரை இடம்பெற்றதுடன், அமைச்சர்கள் தங்களது பிரேரணைகளை சபையில் முன்வைத்தனர். கல்லூரியின் முதல்வர் நா.மகேந்திரராசா தலைமைதாங்கிய நிகழ்வில் பிரதி அதிபர் ராஜி துரேஸ் ராம், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# செல்வச்சந்நிதியில் ஆடிவேல் பூஜை

யாழ்ப்பாணம், ஜூன் 26
வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவின் கொடியேற்றத் திருவிழாவை முன்னிட்டு வேல் அனுப்பும் பயணப்பூஜையானது இன்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (ச41-66)



யாழ். கோட்டமட்ட தமிழ்த்தின வினாவிடைப் போட்டியில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. (ச-17)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 19 நாள்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி 13ஆம் திருவிழாவாக சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும் 11ஆம் திகதி பூங்காவனமும் 12ஆம் திகதி தெப்பத்திருவிழாவும் இடம்பெற்று 14ஆம் திகதி நிறைமணித் திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது.

அலங்காரத் திருவிழாக் காலத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவிற்காக புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்டம் இடம்பெறவுள்ளது. (ச-41-100)

# உடைமையில் கசிப்பு; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். ஆனைக்கோட்டையில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-25,125)

# முதியோர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 26
தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது. இந்தக் கொடுப்பனவை 27ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பாலசுப்பிரமணியம்
விமலாதேவி

திதி: பிரதமை

தோற்றம் 20.07.1961 மறைவு 06.07.2024



அம்மா — விமலாதேவி என்ற அழகிய பெயரில்,
வாழ்க்கையை நமக்காய் அர்ப்பணித்த இறைவி.
வெறும் ஒரு ஆண்டே கடந்தது காலனின் கணக்கில்,
ஆனால் ஒவ்வொரு நாளும் உங்கள் நினைவில் நாங்கள் வாழ்கிறோம்.
வார்த்தைகள் இல்லை, வேதனைகள் மட்டுமே சொல்கின்றன,
உங்களை இழந்தது எங்கள் வாழ்வின் பெரும் வெறுமை
உங்கள் சிரிப்பும், மென்மையான குரலும்
எங்கள் நெஞ்சில் இன்று மழையாகும்.
நம் வீட்டில் உங்களின் நினைவுகள் மட்டும்
தினமும் தீபமாய் எரிகின்றன.
அன்னையின் ஆன்மா சாந்தியடைய,
எங்கள் மனமெல்லாம் வேண்டுகிறோம்.
அம்மா, எங்கள் நெஞ்சங்களில்
நீங்கள் என்றும் நிலைத்து வாழ்ந்திடுவீர்.

59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

நீங்கா நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(CS/58685) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org